**தலைப்பு 298 – அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 298 – அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. | புதிய ஆய்வுகூட கட்டிடத்தினைப் பயன்படுத்த முடியாமை | 2.1(அ) |
| | | 2. | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் அடையப்பெறாமை | 2.1 (ஆ),(இ),(ஈ) |
| | | 3. | நிர்ணயிக்கப்பட்ட வடிவத்திற்கமைய திட்டமிடப்பட்ட பெறுகைகள் பின்பற்றப்படாமை | 2.3 |
| | | 4. | மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் | 2.4 |
| | | 5. | உள்ளகக் கட்டுப்பாட்டு பிரிவு ஸ்தாபிக்கப்படாமை | 2.6 |
| | | 6. | மனித வளங்கள் முகாமைத்துவப் பலவினங்கள் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும், | நிலுவையாகவுள்ள மீதிகள் அறவிடப்படாமை | 2.5 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் வேண்டப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள், அறிக்கைகள் என்பவற்றை எரிய காலத்தில் சமர்ப்பித்தல். | செயலாற்றல் அறிக்கையினை சமர்ப்பிக்காமை | 2.2 |
| 128(1)(ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்கு, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்படாமை | 2.7 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 08 இல் திறக்கப்பட்ட புதிய ஆய்வுகூட கட்டிடத்திற்கு ரூபா 768 மில்லியன் தொகையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், கட்டிடத்தின் உட்பகுதிக்குள் மனித உடலுக்கு தீங்குவிளைவிக்ககூடிய வாயு நிலைமையொன்று காரணமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த தீங்குவிளைவிக்க கூடிய வாயு நிலைமையினை தவிர்ப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் புதிய வளிப்பதனாக்கி முறைமையொன்றினை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், நீதிமன்றங்களில் சட்ட நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டதன் காரணமாக 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வளிப்பதனாக்கி முறைமை ஸ்தாபிக்க முடியாதிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் முன்பொதியிடல் வகைகளின் (Pre – packed item) 05 பொறிகளினைப் பரீட்சிப்பதற்கு மற்றும் ரூபா 100,000 தொகையொன்றை உழைப்பதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது எவ்வித பொதிகளும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்கள நிதியிலிருந்து பணத்தை பயன்படுத்துவதன் மூலம் ரூபா 20 மில்லியன் தொகை பெறுமதியுடைய ஆய்வுகூட உபகரணங்களின் கொள்வனவு மற்றும் ஸ்தாபிப்பு 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் ரூபா 16 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டிருந்த போதிலும், ஆனால் பௌதீக செயலாற்றல் 8 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது.

(ஈ) 2015 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட, தேசிய அளவயியல் ஆய்வுகூடத்தின் (National Survery Laboratory) நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், செலுத்துகைக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்ட ரூபா 30 மில்லியன் தொகையொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 இன் 402 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கை மீளாய்வாண்டின் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 150 நாட்களுக்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த அறிக்கை 2018 யூன் 30 வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறுகைத் திட்டமிடல்**

2006 மார்ச் 24 இன் 128 ஆம் இலக்க தேசிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட வடிவத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டிலிருந்து தொடர்கின்ற பெறுகைகள் மற்றும் புதிய பெறுகைகளினைக் காட்டுகின்றவாறு பெறுகை தனித்தனியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.4 செயற்பாடுகளினை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் பயன்படுத்துகை**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 5 ஆண்டுகளிள் போது திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பான தகவல், பயன்பாடு, சேமிப்புக்கள் மற்றும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமொன்றாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 63.35 | 63.04 | 0.31 | 0.49 |
| | மூலதனம் | 225.50 | 212.36 | 13.14 | 5.83 |
| | **மொத்தம்** | **288.85** | **275.40** | **13.45** | **4.66** |
| 2014 | மீண்டெழுபவை | 71.86 | 71.73 | 0.53 | 0.74 |
| | மூலதனம் | 230.50 | 221.48 | 9.02 | 3.91 |
| | **மொத்தம்** | **302.36** | **292.81** | **9.55** | **3.16** |
| 2015 | மீண்டெழுபவை | 95.94 | 95.00 | 0.94 | 0.98 |
| | மூலதனம் | 220.50 | 220.36 | 0.14 | 0.06 |
| | **மொத்தம்** | **316.44** | **315.36** | **1.08** | **0.34** |
| 2016 | மீண்டெழுபவை | 101.05 | 99.03 | 2.02 | 2.00 |
| | மூலதனம் | 210.00 | 130.84 | 79.16 | 37.70 |
| | **மொத்தம்** | **311.05** | **229.87** | **81.18** | **26.09** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2017 | மீண்டெழுபவை | 103.06 | 100.82 | 2.24 | 2.17 |
| | மூலதனம் | 70.00 | 21.58 | 48.42 | 69.17 |
| | | --------- | --------- | --------- | --------- |
| | **மொத்தம்** | **173.06** | **122.40** | **50.66** | **29.27** |
| | | ===== | ===== | ===== | ===== |

மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிக்கு ரூபா 30 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதிலும், எவ்வித ஏற்பாடும் பயன்படுத்தப்படாமை காரணமாக ஒட்டுமொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செலவின விடயமொன்றிக்கு மிகை ஏற்பாடொன்று மேற்கொள்ளபட்டதுடன் ஏற்பாட்டினைப் பயன்படுத்திய பின்னர் ரூபா 18.4 மில்லியன் தொகையொன்று சேமிக்கப்பட்டதுடன் அது செலவினவிடயத்தின் மொத்த தேறிய ஏற்பாட்டின் 92 சதவீதமாகக் காணப்பட்டது.

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 29801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 6.75 | 6.75 | 3.75 | 5.55 | 30.0 | 20.01 |

### நிலுவையாகவுள்ள கடன் மீதிகளினை அறவிடாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர மொத்த நிலுவையாகவுள்ள கடன் மீதி ரூபா 402,706 தொகையாகக் காணப்பட்டது. இந்த மீதிகள் 1 தொடக்கம் 5 ஆண்டுகள் வரையான வீச்சையுடைய காலப்பகுதியைக் கொண்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் 2017 திசெம்பர் 31 இறுதி வரையிலும் அவை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட திணைக்களம் அவர்களின் சொந்த கடமைகள் மற்றும் பொறுப்புக்களினை நிறைவேற்றுவதற்கு நிதிப்பிரமாணத்தின் 133 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர் உள்ளகக் கணக்காய்வு பிரிவினை ஸ்தாபித்தல் வேண்டும். திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 2.7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் தனிநபர் ஊதியங்கள் மீதான செலவினம்**

செயற்பாடுகளினை செயற்படுத்துவதற்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றம் வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதியங்களுக்கான செலவின விடயத்திற்கு திணைக்களத்தினால் ரூபா 99.4 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

| ஊழியர்கள் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 16 | 10 | 06 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 30 | 09 | 21 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 198 | 119 | 79 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 104 | 61 | 43 |
| | **மொத்தம்** | **348** | **199** | **149** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) சிரேஷ்ட மட்டத்தில் 06 வெற்றிடங்கள், மூன்றாம் மட்டத்தில் 21 வெற்றிடங்கள், இரண்டாம் மட்டத்தில் 79 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 43 வெற்றிடங்கள் உள்ளடங்களாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 43 சதவீதத்திற்குச் சமமான 149 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொடர்ந்தும் வெற்றிடமாக காணப்பட்டதுடன் திணைக்கள செயற்பாடுகளினை இடையூரின்றி நடாத்திச் செல்லுவதற்கு ஊழியர்களினை இனங்கண்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அங்கீகரிக்கப்பட்ட 16 சிரேஷ்ட மட்ட பதவிகளில், பிரதிப் பணிப்பாளர் பதவி, உதவி பணிப்பாளர் பதவி, உதவிப் பணிப்பாளர் பதவி (நிர்வாகம்), கணக்காளர் பதவி (உள்ளகக் கணக்காய்வாளர்) போன்ற பணிப்பாளர் பதவிகள் உள்ளடங்களாக 05 பதவிகளும் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் மட்ட 30 பதவிகளில் 21 பதவிகளும் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில், அளவுக்கூறு விஞ்ஞான பரிசோதகர் உத்தியோகத்தர்களின் 15 பதவிகள், அளவுக்கூறு மதிப்பாய்வு சேவைகள் மற்றும் தந்திரோபாய பரிசோதகர் உத்தியோகத்தர்களின் 31 பதவிகள், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூட உதவியயாளர்கள் பதவிகளின் 04 பதவிகள் மற்றும் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்ட

அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் ஒவ்வொன்றிலும் 05 பதவிகள் மாத்திரம் உள்ளடங்களாக இரண்டாம் மட்டத்தில் 79 பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தது.

(ஆ) தாபனக்கோவையின் II ஆம் பந்தியின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிரந்தர நியமனமொன்று மேற்கொள்ளும் வரை மாத்திரம் தற்காலிக பரிகாரமாக பதில் நியமனமொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பதவிகளுக்கு முழு நேர உத்தியோகத்தர்களின் சேவை தேவைப்படுமாகயிருந்தால் தாமதமின்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். 2009 மே 14 இல் முன்னாள் பணிப்பாளரொருவரின் ஓய்வின் பின்னர் 2017 திசெம்பர் 31 வரையிலும் வெற்றிடத்தினைப் நிறப்பியிராது பதில் அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.